தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | நவம்பர் 2023 | கனி 12



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



**பாடம்** : 47

**தலைப்பு** : கிலெயோப்பா மரியாள் – Mary the wife of Cleophas

**வேத வாசிப்பு** : யோவான் 19:25-30

1. யாக்கோபு, யோசேக்கும் தாய் - மத்தேயு 27:56
2. சுகந்த வர்க்கமிடும்படி வந்தவர்களில் ஒருவள் - மாற்கு 16:1
3. இவள் மரியாளுடைய சகோதரி - யோவான் 19:25


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

**G-Pay & PhonePe - 9443558041**



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்



**Our TV Program: All Days of the Week**

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Sunday, Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ



**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 நவம்பர் – 2023 கனி – 12


ஆசிரியருரை

## கர்ப்பவேதனை

Pain of Childbirth



**அ**ப்போஸ்தலர்களிலே அதிகமாக ஊழியத்தைக்குறித்து கர்ப்பவேதனை அடைந்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் கலாத்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" என்றான் (கலா.4:19). கர்ப்பவேதனையைப் பற்றி ஒரு ஸ்திரீக்குத்தான் தெரியும். அந்த அளவு அப்போஸ்தலனாகிய பவுல் வேதனைப்பட்டிருக்கிறான். இந்த கர்ப்பவேதனையானது கலாத்திய சபையாரிடத்தில் கிறிஸ்துவானவர் உருவாகவேண்டுமென்பதுவே பவுலுடைய நோக்கமாயிருந்தது. ஆகையால் மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறார். அவர்கள் மத்தியில் ஊழியம் செய்து அவர்களை கிறிஸ்துவுக்குள் பெற்றெடுத்திருக்கிறார். அவர்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்கு உட்படும்போது அவர்களை மறுபடியும் புதுப்பிக்கவேண்டியிருக்கிறபடியால் மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்றான். மேலும் அவர்களுக்கு எழுதும்போது; "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்" என்றான் (கலா.4:15). கலாத்திய சபையார், அப்போஸ்தலனாகிய பவுலின்மீது அளவில்லா அன்பு கொண்டிருந்தனர். ஆகையால் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள் என்று எழுதுகிறான். அந்த ஆதி அன்பு இல்லாதபடியால் மறுபடியும் உங்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறான். "ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்" எனக் காண்கிறோம் (யோவா.16:21). அப்.பவுல் அதைப்போல கர்ப்பவேதனைப்பட்டான்.

இன்றைக்கும் ஆதிஅன்பு சபையில் குறையும்போது வழிநடத்துகிற ஊழியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறதை அறிகிறோம். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வளரும்போது அதைப்பார்த்து அந்த சபையின் ஊழியர் மிகவும் சந்தோஷம் அடைவார். ஒரு மந்தையின் மேய்ப்பனுக்கு ஆடுகள் நன்கு வளர்ச்சியடையவேண்டும் என்ற விருப்பமிருக்கும். மந்தைகள் சிதறப்படவும், மந்தை நாளுக்கு நாள் குறையவும் காணப்பட்டால் எந்த ஒரு மேய்ப்பனுக்கும்

சந்தோஷம் ஏற்படாது அவன் மந்தையை நினைத்து கவலைகொள்ளுவான். கலாத்திய சபையாரைப்பார்த்த பவுல்; "ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? என கேள்வி எழுப்புகிறான் (கலா.3:3). அநேகர் ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்த பின்பு உலகப்பிரகாரமாக மாம்சசிந்தைகொண்டு சத்தியத்திற்கு எதிராக அநேக காரியங்களில் ஈடுபடுவார்கள். அதாவது பரமாவை ருசிபார்த்து விட்டு ஒரு மனிதன் பாதாளத்தை விரும்பினால் எப்படியிருக்கும்? கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரண்டால் எப்படியிருக்கும்? அதைப்போல மாம்ச சிந்தை கொள்ள ஆரம்பித்தனர். ஆகையால் நீங்கள் இத்தனை புத்தியீனரா? என்கிறான். புத்தியில்லாத மிருகங்களைப்போல அநேகர் மாறிவிடுகின்றனர். இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளாக வந்து பலவருடங்கள் சபையில் நிலைத்திருப்பவர்கள்கூட பின்மாற்றமாகிப்போகிறதைக்குறித்து மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுடைய நம்பிக்கை என்னவாயிற்று? ஏன் இப்படியானார்கள்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறதல்லவா? அதைப்போல பவுலுக்கும் எழும்பிற்று.

மேலும் பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதின கடிதத்தில்; "அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்" என்கிறான் (கலா.4:3). தகப்பன் ஒரு விக்கிரகாரதனைக்காரன் என்றால் அந்தப்பிள்ளையும் தகப்பனுடைய வழியில் அறியாமல் விக்கிரகாரதனை செய்கிறது. நாமும் அந்தப்படியாக இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். அவைகள் நம்மை ஆண்டுவந்தது. "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" என தெளிவாக எழுதியிருக்கிறான் (எபே.4:14,15). ஆகையால் கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்த ஒருவன் இனி குழந்தையல்ல. மேலும் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களைக் கேட்டு அங்குமிங்கும் செல்லாமல் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் அநேகர் குழந்தைகளாகவே இருக்கின்றனர், ஆகையால் வஞ்சிக்கப்படுகிறார்கள். சத்தியத்தை சீர்தூக்கி பார்க்க அவர்களுக்குத் தெரியவில்லை, மனுஷருடைய மாயத்தினாலும் வஞ்சகத்தினாலும் சிக்கிக்கொள்ளுகிறார்கள். காற்றினால் அடியுண்டோடுகிற மேகத்தைப்போலவும், கடலலைகளைப்போலவும் ஒரு இடத்தில் நிலைத்திராமல் அங்குமிங்கும் அலைந்துதிரிகிறதைப் பார்க்கிறோம். இவர்கள் மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களைப்போல இருக்கிறார்கள் என யூதா குறிப்பிடுகிறான். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? நீங்கள் குழந்தைகள் அல்ல. குழந்தைகளாயிருந்த காலத்தில குழந்தைகளைப்போல சிந்தித்தீர்கள், பேசினீர்கள், செய்தீர்கள். இப்பொழுது நீங்கள் கர்த்தருக்குள் வளர்ச்சியடையக்கூடிய பூரணபுருஷராயிருக்கிறீர்கள். ஆகையால் கிறிஸ்துவானவர் உங்களில் இருக்கும்படிக்கும், அவருடைய சிந்தை உங்களில்

எப்பொழுதும் இருக்கும்படிக்கும், தேவனுக்குரியவைகளை சிந்தியுங்கள், செயல்படுங்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி எப்பொழுதும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழ பிரயாசப்படுங்கள். வேதாகமம் இதையே உங்களில் எதிர்பார்க்கிறது.

மேலும் "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப் பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" என்று கொலோசெய சபையாருக்கு பவுல் எழுதுகிறதை நாம் கொலோ.2:6,7-வசனங்களில் படிக்கிறோம். ஒவ்வொருவரும் இயேசுவை எப்படி ஏற்றுக்கொள்ளுகிறார்களோ அந்தப்படியே அவருக்குள் வேர்கொண்டவர்களாக வளர்ச்சியடையவேண்டும். ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்" என்றார். இயேசுவை அல்லாமல் நீங்கள் கனிகொடுக்கமுடியாது. நீங்கள் அவரில் நிலைத்திருக்கவேண்டும். அவருக்குள் வேர்கொள்ளவேண்டும். சிலர் வேர்கொண்டிருக்கிறார்கள், ஆனால் அந்த வேர் கிறிஸ்துவில் நிலைத்திருக்கக்கூடிய வேர் அல்ல, மனிதர்கள் மீது தங்களுடைய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பாறைகளின்மீது முளைத்திருக்கும் செடிகளைப்போன்றவர்கள், கொஞ்சகாலம் நிலைத்திருப்பார்கள், தண்ணீர் அற்றசமயத்தில் கருகிப்போகும் செடிகளைப்போல அவர்கள் கருகிப்போவார்கள். கர்த்தருக்குள் நிலைத்திருக்கமாட்டார்கள்.

ஆகையால் ஒவ்வொருவரும் இயேசுவில் வேர்கொள்ளவேண்டும், அவர்மேல் கட்டப்படவும்வேண்டும். மூளைக்கல்லாகிய அஸ்திபார கல்லை பிதாவாகியதேவன் எருசலேமிலே வைத்தார் அதன்மீது கட்டப்படுகிறவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை, ஏனெனில் அது பரீட்சிக்கப்பட்ட கல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல். இந்தக்கல்லின்மீது எவன் விழுவானோ அது அவனை நொறுக்கிப்போடும். இந்தக்கல்லின் மீது எவன் அஸ்திபரம்போட்டு கட்டுவானோ அவன் என்றென்றுமாய்நிலைத்திருப்பான். அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் மற்றும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இவர்மீது கட்டப்பட்டனர். "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" என மிகதெளிவாக எழுதப்பட்டுள்ளது (எபே.2:20-22). நீங்கள் இவ்விதமாக கட்டப்பட்டுள்ளீர்களா? அல்லது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் கட்டப்பட்டு இருக்கிறீர்களா? உங்களை வேதவசனத்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள். கிறிஸ்துவின்மீது நீங்கள் கட்டப்பட்டவர்களாக இருக்க, அவருக்குள் நடந்துகொண்டு, தேவசித்தம் செய்யவேண்டும். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கப்படுகிறீர்கள், ஆகையால் அவர் போதித்தபடியே நடந்து, அப்படியே

விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே பெருகவேண்டும். ஒரு கிறிஸ்தவனுக்கு அடித்தளம் விசுவாசம். இந்த விசுவாசத்திலே ஒவ்வொரு கிறிஸ்தவனும் நிலைத்திருக்கிறான். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாதகாரியம். விசுவாசத்தினாலே நம்முடைய முற்பிதாக்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள் வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள் என்றெல்லாம் பார்க்கிறோம். இவர்களைப்போல நாமும் விசுவாச வீரர்களாக இருந்து கர்த்தருக்குள் வளர்ச்சியடைய வேண்டும்.

பலர் உலகக்காரிங்களில் விழுந்துபோய்விடுகின்றனர். ஆகையால் "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" என பவுல் எச்சரிக்கிறதை காண்கிறோம் (கொலோ.2:8). உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். எனவே லௌகிக ஞானம் ஆவிக்குரிய மனிதனையும் பற்றிப்பிடிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தவிதமான ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார் பவுல். அந்தவிதமான தந்திரத்தில் தேமா போன்றோர் சிக்கி உலககாரியங்களுக்கு ஊழியம்செய்யும்படியாக சென்று விட்டனர். இவைகள் மனுஷர்களின் பாரம்பரியம் என கூறுகிறான். இது கிறிஸ்து வைப்பற்றினது அல்ல. கிறிஸ்துவானவர் பிசாசு கொண்டுவந்த காரியங்களில் வெற்றிசிறந்தார். ஒவ்வொருவரும் இவ்விதமாக பிசாசு கொண்டுவரும் தந்திரமான வார்த்தைகளை நம்பி மோசம்போய்விடாதபடி எச்சரிக்கையாயிருக்க போதிக்கப்படுகிறோம். "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங் களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ.2:9,10). நீங்களும் கர்த்தருக்குள் பரிபூரணமாயிருப்பீர்கள் என நம்புகிறோம்.

**ஒரு ஊழியனின் வேலை ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் தேர்ச்சியடையசெய்வது தானா?**

ஆம், அப்பொழுதே அவன் எஜமானிடம் கூலியைப்பெறுவான். ஒருவேலைக்காரன் தன்னுடைய வேலையை தினமும் சரியாகசெய்து எஜமான் வரும்போது அவைகளை ஒப்புவிப்பான். அதைப்போல பிரதான ஆசாரியராகிய இயேசு மீண்டும் வரப்போகிறார். அதற்குள்ளாக மேய்ப்பர்கள் மந்தையை சிறப்பாக மேய்த்து பிரதான மேய்ப்பனுக்குக் கனக்கு ஒப்புவிக்கவேண்டும். இதையே பவுல்; "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" (கொலோ.1:28). ஒரு ஆசிரியர் மாணவர்கள் பரீட்சையில் தேர்ச்சிபெறவேண்டு மென கற்றுக்கொடுக்கிறார்கள். அதைப்போல ஒரு கிறிஸ்தவனை கிறிஸ்துவுக்கு முன்பாக தேர்ச்சியடைந்தவனாக நிறுத்தவேண்டும், அது ஒரு ஊழியனுடைய வேலை அதற்காக நாங்கள் அவரை அறிவித்து உபதேசம் பண்ணுகிறோம். நீங்களும் கிறிஸ்து இயேசுவுக்குள் வளர்ச்சியடைய உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# வேதாகமத்தை எவ்வாறு வாசிப்பது?
# How to read the Bible

-J.C.Choate

**நீ**ங்கள் எப்பொழுதாவது வேதாகமத்தை வாசித்திருக்கிறீர்களா? ஆம், அது ஒரு பெரிய புத்தகம் என்பதை நான் அறிந்திருக்கிறேன், அதை வாசிக்க முயற்சி செய்வதும், அதன் செய்தியை உணர்ந்து கொள்ள முயற்சி செய்வதும் ஆகிய எண்ணம் ஒரு அறை கூவலாக இருக்கிறது. நான் உங்களுக்கு சில தகவல்களையும், செய்திகளையும் அளிக்க விரும்புகிறேன். அது இந்த செய்முறையை தெளிவுபடுத்துவதாக இருக்கும். முதலாவதாக நாம், வேதாகமம் தேவனுடைய அதிகாரத்துடனே பேசி, வேதாகமத்தை வாசித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களுடைய வாழ்க்கையை வழி நடத்துவதாக இருக்கிறது என்ற உரிமையை நிலை நிறுத்துவது தேவையான காரியமாய் இருக்கிறது. 2தீமோ.3:16-17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று உறுதி கூறுகிறது.

வேதவாக்கியங்களை எழுதியவர்கள், அவைகளை "ஆவியினால் ஏவப்பட்டு" எழுதியதாக உரிமையோடே கூறினார்கள் அடிக்கடி சொல்லப்பட்ட விஷயம் என்னவென்றால், "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி..." (எசேக்.18:1) என்பது ஆகும். முழு வேதாகமும் ஏறக்குறைய 40 மனுஷர்களால், ஏறத்தாழ 1500 வருஷ காலத்துக்கு மேலாக எழுதப்பட்டதாயிருப்பினும் முதல் புத்தகத்திலிருந்து கடைசி புத்தகம் வரை முரண்பாடுகள் அற்ற இசைவான செய்தியை உடையதாக இருக்கிறது. வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம், தேவனோடே கூட மனுஷன் பரதீசில் இருந்தது தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மனுஷன் அந்த ஐக்கியத்தின் பழைய நிலைமைக்கு கொண்டுவரப்படுவதுடன் நிறைவடைகிறது. வேதாகமத்தின் எழுத்தாளர்கள் எவரும் ஒரே காலத்தில் வாழவில்லை என்ற போதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள், மற்றவர்களால் எழுதப்பட்டவைகள் சென்றடையும் வழி இல்லாதவர்களாக இருந்தனர்.

நாம் அறிவுறுத்தப் படுகிறோம்: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் **சத்தியவசனத்தை நிதானமாய் பகுத்துப்** போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என அறிவுறுத்தப்படுகிறோம் (2தீமோ.3;15).

**பழைய, புதிய ஏற்பாடுகள்**

வேதாகமத்தை நாம் எவ்வாறு நிதானமாய் பகுத்து பார்க்கிறவர்களாயிருக்கிறோம்? நாம் முதலாவதாக இதில் இரண்டு பெரும் பாகங்கள் இருப்பதை காண்கிறோம்: **பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு.** ஒரு "ஏற்பாடு" என்பது ஒரு உயில் அல்லது உடன்படிக்கையாக இருக்கிறது. இந்த காரியத்தில் உடன்படிக்கைகள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையே இருக்கிறது.

**பிதாக்களின் காலம்**

உலக வரலாற்றில் இரண்டு பிரதான கால பகுதிகளை உள்ளடக்கிய

தனித்தனியே 39 "புத்தகங்களை" கொண்டதாக பழைய ஏற்பாடு இருக்கிறது. முதலாவதாக ஒரு சுருக்கமான சரித்திரம்-பிதாக்களின் காலம்- ஆதியாகமம் புத்தகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் தேவன் தமக்கு உண்மையுள்ளவர்களாயிருந்த குடும்ப பிதாக்களுடனே (முற்பிதாக்கள்) நேருக்கு நேராக செயல்படுகிறவராயிருந்தார்.

ஆதி.1;1 சொல்கிறது, "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று. இந்த அதிகாரங்கள், மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட விதம், பாவத்திற்குள்ளாக அவன் விழுதல், அவனுடைய உடனடியான பின் சந்ததியார் மற்றும் உலக ஜனங்களுக்குள்ளே கீழ்ப்படியாமையின் வளர்ச்சி ஆகியவற்றை இந்த அதிகாரங்கள் சொல்லுகின்றன.

இப்புத்தகத்தின் 6-8 அதிகாரங்களில் நீதிமானாயிருந்த ஒரு மனுஷன் நோவா என்பவனையும், பூமியின் மேல் வரவிருந்த ஜலப்பிரளயத்தையும், அதற்கு அவனும், அவனுடைய குடும்பமும், சகல மிருக ஜீவன்களுடைய பிரதிநிதித்துவங்களும் இரட்சிக்கப்படும்படியாக, ஒரு பேழையை கட்டும்படியாக தேவன் அவனுக்கு சொன்ன போதனைகளையும் வாசிக்கிறோம். இன்றைக்கு அவிசுவாசிகள் உலகளாவிய ஜலப்பிரளயத்தை பற்றிய குறிப்பு ஒரு கட்டுக்கதையே தவிர வேறொன்றும் இல்லை என்று கூறுவார்கள். இதற்கு நேரிடையான சவாலாக பழங்கால நாகரீகங்களை பற்றிய குறிப்புகளில் 200-க்கும்மேற்பட்ட ஜலப்பிரளயத்தை குறித்த குறிப்புகள் உலகம் முழுவதிலும் சிதறி காணப்படுகின்றன. இந்த குறிப்புகளை எழுதியவர்கள், ஒருவர் மற்றவருடைய வரலாறுகளை அடைய வழியில்லாமல் இருந்த போதிலும், அநேகம் வேதாகம குறிப்புகளில் குறிப்பிட்ட விளக்கங்கள் ஒத்துப் போகக்கூடியவை களாயிருக்கின்றன. ஆதியாகமம் 11-ம் அதிகாரத்திலுள்ள பெரிதான "தேசங்களின் பட்டியல்" உலக மக்களின் சரித்திரங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கிறது.

### மோசேயின் யுகம்

ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் தேவன் கல்தேயருடைய பட்டணமாகிய ஊர் என்னும் பட்டணத்தைச் சேர்ந்த ஆபிரகாம் என்ற ஒரு மனுஷனோடு தேவன் செய்த உடன்படிக்கையை நாம் வாசிக்கிறோம். பூமியிலுள்ள சகல தேசங்களும் அவனுடைய சந்ததிகள் வழியாக ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குப்பண்ணப்பட்டது (ஆதி.12:3). இஸ்ரவேலர் என்று அழைக்கப்பட்ட அவருடைய ஜனங்கள் வந்தார்கள், அதின் மூலமாக இயேசுகிறிஸ்து பிறந்தார்.

யாத்திராகமம் தொடங்கி பழைய ஏற்பாட்டில் கடைசி புத்தகமாகிய மல்கியா வரை தேவன் ஆபிரகாமின் சந்ததியாருடனே கொண்டிருந்த செயல்பாடுகளை சொல்வது மாத்திரமல்ல, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வரப்போகிற இரட்சகர் தேவகுமாரன் இயேசுகிறிஸ்துவின் தன்மை குறித்த அநேக தீர்க்க தரிசனங்களை நாம் காண்கிறோம். வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு பகுதி முக்கியமானதாக இருக்கிறது, ஏனென்றால் இது நமக்கு மிகச் சரியாக தேவன் மனுமக்களோடு 4000 ஆண்டுகளாக கொண்டிருந்த செயல்பாடுகளை வரலாற்று குறிப்பாக நமக்கு அளிக்கிறது; தேவனுடைய தன்மையையும், அவர் தம்முடைய ஜனங்களுக்காக கொண்டிருந்த வாஞ்சைகளையும் நாம் அதிகமாக உணர்ந்து கொள்ள இது உதவியாக இருக்கிறது; மேலும் இந்த தீர்க்கதரிசன வாக்கியங்கள் நிறைவேறுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் அவைகளின் நிறைவேற்றத்தையும் நமக்கு அளிக்கிறது. இந்த உண்மைகள் கவனத்துடனே கற்கப்பட்டு வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது, நாம் இவ்வுலகத்தில்

வாழ்வதற்கும், வரவிருக்கிற உலகத்தில் அழியாமையின் வாக்குத்தத்தத்தையும் அளிக்கிறபடியால் நம்முடைய வழிகாட்டியாயிருக்கிறது என்பதையும் நாம் நம்பமுடியும்.

## கிறிஸ்தவ யுகம்

வேதவாக்கியங்களுக்கு புதிதாய் இருக்கிறவர்களுக்காக ஆதியாகமத்தின் முதல் 12 அதிகாரங்களை வாசிக்கத் தொடங்குகிறவர்களுக்கு ஒரு அடிப்படையான உணர்ந்து கொள்ளுதல் உண்டாகும்படி ஒரு சூத்திரமாக (ஃபார்முலா) அது இருக்கும், பின்னர் அவர்கள் புதிய ஏற்பாட்டை வாசிக்கத் தொடங்கலாம். இந்த பெயரிலிருந்தே இந்த உடன்படிக்கைதான் இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது என்ற முடிவை நாம் எடுக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான்: கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை குறித்த நான்கு குறிப்புகள்) பழைய ஏற்பாட்டிலுள்ள இயேசுகிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, உபதேசங்கள், மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலை குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்களை நமக்கு அளிக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்பாக ஏழை பெற்றோருக்கு அவர்கள் வசித்து வந்த சிறிய தேசத்திலே பிறந்த மனுஷனாகிய இவர் மிகவும் மோசமான சிலுவை மரணத்தை அடைந்தார். அவருடைய மரணத்துக்கு பின்னே, அதை போன்றதொரு மரணத்தை யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஆனால் இன்றோ அவர் உலகத்தையே மேற்கொண்டவராக இருந்து வருகிறார். நாட்காட்டிகளே அவருடைய பிறந்த தேதியில் இருந்து கணக்கிடப்பட்டு வருகின்றன.

விளக்குவதற்கு அரிதான இந்த நபர்: இருந்தவராகவும் இருக்கிறவராகவும் இருக்கிறார். தீர்க்கதரிசனங்கள் அவரைக்குறித்து, "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் (சங்.2:7; எபி.1:5) என்றும் உரைத்திருந்தன. தேவத்துவத்தில் ஒருவராயிருந்த அவர் "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (எபி.2;17). எனவே மாம்சத்திலே வந்து மனுக்குலத்தை அதன் சிருஷ்டிகரராகிய தேவனிடமிருந்து பிரித்திருந்த பாவங்களுக்காக, பூரணராக்கப்பட்ட, பலியாக மரித்தார் (எபி.2:17).

கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை குறித்து வாசிப்பதை தொடர்ந்து நீங்கள்,அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையை குறித்து நீங்கள் வாசிப்பீர்கள். அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி தங்களுடைய பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் என்ற நம்பிக்கையை அறிக்கையிட்டு, கல்லறையில் வைக்கப்பட்ட அவருடைய அடக்கத்துக்கு ஒப்பாக தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, ஒரு புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளும்படி உயிரோடெழுப்பப் பட்டவர்களாயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் மீதியான பகுதி சபையின் வளச்சியை குறித்த போதனைகள் மற்றும் கிறிஸ்துவுடனே கூட நடக்கிறவர்களாகிய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களை குறித்த போதனைகளை கொண்டதாக இருக்கிறது.

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம். வெளிப்படுத்தின விசேஷத்தின் பெரும்பாலான பகுதி தீர்க்கதரிசனமாக இருக்கிறது. 20-22 அதிகாரங்களில் உள்ள வாக்குத்தத்தம் என்னவென்றால் புதிய வானம், புதியபூமியிலே தேவனோடே கூட வாழும் வகையில் விசுவாசிகளை எடுத்துக் கொள்ளும்படியாக கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதாகும்.

## நடப்புச் செய்திகள்

✦ மத்திய அரசு பிரதமர் கிசான் திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீதம் தொகையை உயர்த்தி ஆண்டுக்கு ரூ9000/- வழங்கப்பட உள்ளதாக தெரிகிறது. இது 3 தவணையாக ரூ3000/- வீதம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

✦ கடந்த சில ஆண்டுகளில் 12 லட்சம் பணக்கார தனிநபர்கள், தொழிலதிபர்கள், தங்களின் இந்திய குடியுரிமையை விட்டுவிட்டு வெளிநாட்டு குடியுரிமைப் பெற்றனர்.

# ஜெபியுங்கள்



- ✦ சென்ற மாதம் நடைபெற்ற வேதாகமப்பள்ளிக்காக...
- ✦ 35 மாணவர்களும் வேதபயிற்சியை முடிக்க...
- ✦ இவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களுக்காக...
- ✦ தொலைக்காட்சி மற்றும் யூடிப் ஊழியங்களுக்காக...
- ✦ நமது மாத இதழின் வளர்ச்சிக்காக...
- ✦ ஆந்திரா ஊழியங்களுக்காக...
- ✦ வரக்கூடிய ஐந்து மாநில தேர்தலுக்காக...

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" – மாற்கு 14:38

# நான் யார்? – Who Am I?



- ◆ நான் கீரியோத் ஊரான்
- ◆ என்னை வேதாகமம் திருடன் என்று சொல்லுகிறது
- ◆ என்னை ஒருவர் துரோகி என எழுதியிருக்கிறார்
- ◆ ஆண்டவரும் நான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்றார்
- ◆ எனக்குள் சாத்தான் புகுந்தான்
- ◆ என் இடத்தை வேறொருவன் பெற்றான்
- ◆ நான் பெற்ற வெள்ளிக்காசு தேவாலயத்தில் சேர்க்கப்படவில்லை

## வேத அறிவுப்போட்டி 276-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. நெகேமியா | - நெகே.9:20 |
| 2. பவுல் | - 2கொரி.5:20 |
| 3. ஆமான் | - எஸ்தர் 5:14 |
| 4. கலாத்தியர் | - கலா.5:8 |
| 5. எலிகூ | - யோபு 32:9 |
| 6. அன்புகூரக்கடவன் | - எபே.5:33 |
| 7. அறிவிக்கிறார் | - சங்.147:19 |
| 8. பவுல் | - பிலி.4:13 |
| 9. தீவினை, நன்மை | - நீதி.13:21 |
| 10.கொலோசெய சபை | - கொலோ.4:16 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 2. Mrs. ஆலிஸ்குணசீலி | - சாயர்புரம் |
| 3. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 4. Mrs. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 5. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 6. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 7. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 8. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 9. Mrs. நவரத்தினம்ஞானராஜ் | - தூத்துக்குடி |
| 10. Mrs. பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 11. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 12. C. ரூபவல்யா | - நாசரேத் |
| 13. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 14. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 15. S. அசோக்குமார் | - தூத்துக்குடி |
| 16. S. ஓசியாஹரிராகவன் | - வேப்பம்பட்டு |
| 17. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 18. S. சந்திரகாந்தா | - நெல்லூர் |
| 19. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 20. D. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 21. E. அதிசயம் | - பனைகுடி |
| 22. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 23. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 24. Mrs. ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 25. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 26. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 27. C. அருள்ராஜ் | - சென்னை |
| 28. J. செல்வராஜ் | - புத்தியம்புத்தூர் |
| 29. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 30. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 31. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 32. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 33. R. கஸ்தூரி | - ஒட்ட நத்தம் |
| 34. M. ராமசந்திரன் | - ஒட்ட நத்தம் |
| 35. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 36. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 37. Mrs. ஜான்சி | - ஆனைமலை |
| 38. Mrs. ஜெமிநல்லையா | - கோவை |
| 39. D. விஜயகாந்தா | - வேலூர் |
| 40. J. பிச்சை | - விருதுநகர் |

## வேத அறிவுப்போட்டி 277-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. காலத்தையும், நியாயத்தையும் | - பிர.8:5 |
| 2. உண்மையுள்ளவர் | - 1தெச.5:24 |
| 3. உபதேசம் | - 2கொரி.29:24 |
| 4. பவுல் | - 1தீமோ.6:19 |
| 5. திரளானதண்ணீர்உண்டாகிறது | - எரே.10:13 |
| 6. பவுல் | - 2தீமோ.3:15 |
| 7. எரேமியா | - எரே.புல.5:10 |
| 8. மூப்பனாக | - தீத்து 1:6 |
| 9. தீருவின் | - எசே.28:3 |
| 10. நிழலாய்மாத்திரம் | - எபி.10:1 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 2. Mrs. ஃபிளாரன்ஸ் சித்தர் | - சென்னை |
| 3. C. அருள்ராஜ் | - சென்னை |
| 4. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 5. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 6. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 7. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 8. Mrs. பாலின்மார்ட்டின் | - சிவகங்கை |
| 9. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 10. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 11. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 12. S. ஜாய்சந்திரா | - நெல்லூர் |
| 13. R. கஸ்தூரி | - ஒட்ட நத்தம் |
| 14. M. ராமசந்திரன் | - ஒட்ட நத்தம் |
| 15. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 16. Mrs. ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 17. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 18. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 19. Mrs. நவரத்தினம்ஞானராஜ் | - நாசரேத் |
| 20. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 21. D. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 22. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 23. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 24. A. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 25. Mrs. ஃபிராங்களினாஜான் | - ஊட்டி |
| 26. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 27. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 28. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 29. Mrs. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 30. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 31. J. பிச்சை | - விருதுநகர் |
| 32.S. ஓசியா ஹரிராகவன் | - வேப்பம்பட்டு |
| 33. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 34. E. அதிசயம் | - பனைகுடி |
| 35. Mrs. ஜான்சி | - ஆனைமலை |
| 36. Mrs. ஜெசிராஜசிங் | - திருப்பூர் |

"தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும்
தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும்
கர்த்தர் நல்லவர்"
புலம்பல் 3:25

ப.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**
**Bible Characters**

29



## பரிசுத்த வேதாகமத்தில் சாமுவேல்
## Samuel In The Holy Bible

1. எல்க்கானாவின் மகன்; தாய் அன்னாள் அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள் - 1சாமு.1:20
2. இளம் வயதில் கர்த்தருக்குப் பணிவிடை செய்தான் - 1சாமு.3:1
3. கர்த்தர் சாமுவேலைக்கூப்பிட்டார் - 1சாமு.3:10
4. சாமுவேலின் பிள்ளைகள் நியாயாதிபதிகளாக இருந்து பரிதானம் வாங்கினார்கள் - 1சாமு.12:3
5. சாமுவேல் சவுலை ராஜாவாக்கினான் - 1சாமு.8:6
6. சவுலுக்காக துக்கித்தான் - 1சாமு.15:35
7. சாமுவேலுக்கு கர்த்தருடைய போதனை - 1சாமு.16:7
8. தாவீதை அபிஷேகம்பண்ணினான் - 1சாமு.16:13
9. விசுவாச அட்டவணையில் சாமுவேல் - எபி.11:32
10. சாமுவேல் மரணமடைந்தான் - 1சாமு.25:1

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:

***சாமுவேலின் மரணத்திற்கு பின்பு சவுல் சாமுவேலை சந்தித்தானா?***



**விடை:** ஆம் - "சாமுவேல் சவுலை நோக்கி: நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல்: நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன்; பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்; தேவனும் என்னைக் கைவிட்டார்; அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை; ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு, உம்மை அழைப்பித்தேன் என்றான்" (1சாமு.28:15)

பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

30



### பரிசுத்த வேதாகமத்தில் ஏரோது
### Herod In The Holy Bible

1. ஏரோதியர் இதுமேய சந்ததியார்
2. இதுமேயனாகிய அந்திப்பத்தோர் அதிபதியாக இருந்தான் பின்பு அவன் மகன் பெரிய ஏரோது யூதாவின் தேசாதிபதியானான்
3. இவன் நாட்களில் இயேசு பெத்லகேமில் பிறந்தார் - மத்.2:1
4. இரண்டு வயதுக்கு உட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொலை செய்தான் - மத்.2:16
5. ஏரோது அந்திப்பா பெரிய ஏரோதுவின் மகன் யோவானை சிரச்சேதம்பண்ணுவித்தான் - மத்.14:10
6. இவன் இயேசுவை பார்க்கவிரும்பினான் - லூக்.9:7
7. பரிசேயர் இயேசுவை கொலைசெய்ய ஏரோது மனதாயிருக்கிறான் என்றார்கள் - லூக்.13:31
8. இவன் இயேசுவினிடத்தில் குற்றம் காணவில்லை - லூக்.23:11
9. இவர்களுடைய புளித்தமாவை குறித்து எச்சரிப்பு - மாற்.8:15
10. இவன் ரோமரால் புறத்தேசத்திற்கு அகற்றப்பட்டு பின்பு அங்கே மரித்தான்

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*தாவீதின் வாக்கினால் உரைத்தபடி ஏரோதும் பொந்தியு பிலாத்தும் எவருக்கு விரோதமாய் கூட்டங்கூடினார்கள்?*



**விடை:** இயேசுவுக்கு - ..."ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்" (அப்.4:28)



## பெண்கள் பகுதி

## பெத்தானியில்... – At Bethany...

*-Glory Arjunan*

பெத்தானி என்ற கிராமம் எருசலேமில் ஒலிவ மலையின் கிழக்குச் சரிவில் அமைந்துள்ள ஒரு அமைதியான கிராமம். இந்த கிராமம் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு என்பவர்களின் சொந்த கிராமம் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கு ஒரு முறை 17 பேர் கொண்ட ஒரு சிறிய குழுவிற்கு குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இராவிருந்து நடந்தது. இந்த விருந்தில் சீமோனோடுகூட அவருடைய சீஷர்கள் பன்னிரெண்டு பேரும், மார்த்தாள் மரியாள் மற்றும் லாசரு ஆகிய 17 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இச்சம்பவத்திலிருந்து நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கென்று சில காரியங்களைக் கற்றுக்கொள்வோம்.

முதலாவது, இயேசுவுக்கு இராவிருந்து பண்ணின குஷ்டரோகியாயிருந்த சீமோனைப் பற்றி படிப்போம். இவனைக்குறித்து அநேக வேதாகம ஆராய்ச்சியாளர்கள் இவன் இயேசுவினால் சுகமடைந்தான் என்கின்றனர். ஏனெனில் இவன் குஷ்டரோகியாகத் தொடர்ந்து இருந்திருந்தால் பாளையத்துக்கு புறம்பே இருந்திருப்பான், இங்கேயோ தன் சொந்த வீட்டில் விருந்துபண்ணினபடியால் இவன் சுகமடைந்திருப்பான் என்றும் இன்னும் வேறு பல காரியங்களும் இவனைக் குறித்து சொல்லப்படுகிறது. இவ்விருந்து இவனுடைய விரும்பபத்தின்படி, இவனுடைய வீட்டில், இவனுடைய உணவினைப் பரிமாறி, இயேசுவுக்கு இவன் பண்ணின அற்புத விருந்து, இவனுடைய விருந்தோம்பல் இது!எதற்காக இந்த விருந்தோம்பல்? இயேசுவுக்கு நன்றி சொல்லும்படியான விருந்தோம்பல்! ஏனென்றால், இவன் தன் குஷ்டத்திலிருந்து இயேசுவால் குணமாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இயேசு சீமோனை அவன் குஷ்டத்திலிருந்து சுத்தமாக்கியிருந்தார். எனவே, தான் பெற்றுக் கொண்ட சுகத்திற்காக இயேசுவுக்கு தன் நன்றியை வெளிப்படுத்தும்படி இந்த விருந்தினைப் பண்ணினான் என்று கூறலாம். அத்தோடுகூட தன் சிநேகிதனான லாசருவையும் இயேசு மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பியிருந்தார். வேதாகமம் இவனைக் குறித்து, இவன் ஒரு பெரிய பணக்காரன் என்றோ, ஏழை என்றோ, நடுத்தரக் குடும்பத்தான் என்றோ குறிப்பிடவில்லை. ஆனால் பெத்தானியாவில் குடியிருந்து வந்த இந்த சீமோன் விருந்தளிக்கும்படி இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும், மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவுக்கும் தன் வீட்டைத் திறந்து கொடுத்தான். "அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டுவந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" என்று மாற்.14:3; மத்.26:6,7; யோவா.12:1-3 ஆகிய சுவிசேஷப் புத்தகங்களில் இச்சம்பவத்தைக் காணமுடிகிறது.

இந்த சீமோனின் மேலான செயல்பாடுகள் மூலம் நாம் எதையாவது கற்றுக் கொள்ள முடிகிறதா? சிந்தியுங்கள். நாம் என்றாவது நம்முடைய வீடுகளில் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறோமா? கிறிஸ்தவ நண்பர்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் ஒரு விசேஷித்தக் கூட்டத்தினை ஏற்படுத்தியிருக்கிறோமா? போஜனமில்லாதவர்களுக்கு போஜனத்தைப் பகிர்ந்தளித்திருக்கிறோமா? விருந்தாளிகளுக்கு விருந்தளித்திருக்கிறோமா? விருந்தோம்பல் என்ற செயல்பாடானது மிக முக்கியமானது , அது நமது தமிழர் பண்பாடும் கூட என அறிவோம்.

அநேக கிறிஸ்தவ சகோதரிகள் தங்களையும் தங்கள் குடும்பத்தையுமே

போஷிக்கிறவர்களாக, சுய நலமாக வாழ்ந்து வருகின்றனர். ஒரு சகோதரி இன்னொரு சகோதரியைக் கண்டாலே கதவை அடைக்கிறவர்களாகக் காணப்படுகின்றனர். இதுவா கிறிஸ்தவ அன்பு? வேதாகமம் ரோமர் 12:13ல் "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" என்று சொல்லுகிறது. மேலும் "அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர் மேல் பிரியமுள்ளவனும் நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்" (தீத்து 1:8,9) என்று வேதம் போதிக்கிறது. இவற்றை நாம் சுய பெருமைக்காகவோ, மற்றவர்கள் பார்த்து புகழத்தக்க வகையிலோ அல்லது பூரணமனதில்லாமலோ செய்யக்கூடாது. ஏனெனில் நாம் எதைச் செய்தாலும் கர்த்தருடைய நாமத்திற்காக செய்ய கடனாளிகளாக இருக்கிறோம். 1பேது.4:9ல் "முறு முறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" என்று வாசிக்கிறோம். அந்நாட்களில் நம் முற்பிதாக்களில் ஆபிரகாம் மற்றும் லோத் போன்றோர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு (ஆதி.18:1-33) இப்படிப்பட்ட செயல்களில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அன்பான சகோதரிகளே, நீங்கள் இவ்விதமாக உபசரிக்க ஆயத்தமா? மறவாதிருங்கள்! நம்முடைய இருதயங்களில் குஷ்டரோகத்தைப் போல் அநேக தொற்றுவியாதிகள் இருந்தன. வீண்பெருமை, அகந்தை, புறங்கூறுதல், கோபம், சண்டைகள், பொறாமை, தூஷண வார்த்தைகள் இன்னும் அநேக ஜென்ம சுபாவங்கள் நம்மைத் தொற்றிக் கொண்டிருந்தன. நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னித்து, நம்மில் தொற்றிக்கொண்டிருந்த குஷ்டரோகத்தைப் போன்ற அருவருப்பான குணங்களை நம்மைவிட்டு அகற்றி, நம்மை சுத்தப்படுத்தியிருக்கிறார் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. இப்பொழுது நாம் ஆவியில் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரித்து நமக்குள்ளிருந்த பாவமென்ற நோய்களை குணமாக்கியிருக்கும்போது அவருக்கு நன்றி செலுத்தும்படி, அவரை மகிமைப்படுத்தும்படி, அவரைத் துதிக்கும்படி, பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யவும், அந்நியரை உபசரிக்கவும், கிறிஸ்துவுக்குப் பிரியமான காரியங்களை நடப்பிப்பதும் அவசியமல்லவா?

"பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார். அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (மத்.25:42-46) என்று வேதம் சொல்லுகிறது. அந்நியரை மாத்திரமல்ல, பரிசுத்தவான்களின் குறைவுகளிலும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

**- தொடர்ச்சியை அடுத்த இதழில் காண்க**






# மனோநிலைகள்
# Attitudes

-Betty

மனோநிலைகள்... நம்முடைய ஒரு பகுதியை தீர்மானிக்க நாம் இந்த மனோநிலையை அடக்கியாள்வோமானால்,நம்முடைய நாட்களில் மற்றும் வருடங்களில் எப்பேர்பட்ட மிகப்பெரிய கட்டுபாடாக இருக்கும். நம்முடைய இருதயத்தில் திடனாய் பதியவைத்துக் கொள்வதற்கும், நம்முடையவற்றை நினைவுப்படுத்திக் கொள்வதற்கும் அதிகமதிகமாக, வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் சமாளித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கவும் இது எத்தகைய உண்மை!

கிறிஸ்தவர்கள் கூட காரியங்களை வெவ்வேறாக மதிப்பிடுகின்றனர் ஏனென்றால் வெவ்வேறான மனோநிலைகள்!

சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபட்ட பதில்களையும் அதன் விளைவின் பயன்களையும் பாருங்கள்:

**சபையின் வழக்கமான பாட்டுத் தலைவர் தொலைவில் இருந்தார், எனவே ஒரு மாற்று நபர் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருந்தது.**

ஜார்ஜ்: குறும்பாக, "நான் இது குறித்து கவலைப்படவில்லை, மேரி, இன்று காலை நான் பாடலை நடத்தவிருக்கிறேன். ஏன் அவர்கள் மற்றவர்கள் எவரையும் பாட்டு நடத்தும்படி கேட்டுக்கொள்ளவில்லை?"

புன்முறுவலுடன், ஒரு அசைவு: "வா ஆன்", ஆராதனைக்காக பாடல்களைத் தெரிந்தெடுக்க உதவிசெய். அவர்கள் டாம் தொலைவிலிருப்பதால் நாம் அந்த இடத்தை நிறைவு செய்யும்படி விரும்புகிறார்கள்!"

**ஒரு சிறுவர்களின் வகுப்பிற்கு ஆசிரியர் ஒருவர் தேவைப்பட்டது.**

பார்பரா: "ஓ, மாட்டேன் நீ செய்யமாட்டாயா! நான் பண்படாத சிறுபிள்ளைகள் கூட்டத்திற்கு கற்றுக் கொடுக்கப்போகிறேன்"

ஜேன்: இந்த வயது சிறுபிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க எனக்கு விருப்பம். அவர்கள் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் போதிய தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள், எனவே அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க பல வழிமுறைகள் உள்ளன. மேலும் இந்த வயது கற்றுக்கொள்ள மிக ஆயத்தமுள்ள வயது!

**போதகர் விடுமுறையில் இரண்டு வாரத்திற்கு தொலைவில் இருந்தார்.**

ஜான்: "எனக்குத் தெரியவில்லை ஏன் எப்போதும் எல்லாரும் கூடுதல் வேலைகள் எல்லாவற்றையும் என்மேலே திணிக்கிறார்கள்". ஏன் மற்ற சில மனிதர்களால் ஏதாவது சில பொறுப்புகளை செய்யமுடிவதில்லை?"

சார்லஸ்: "கண்டிப்பாக, ஜிம்முக்காக நான் செய்வேன். என்னுடைய முன்னேற்றத்திற்காக ஒரு சிறிய வேலையைக் கூட்டிக் கொள்வது எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். இப்போது நான் பேசுவதற்கான சந்தர்ப்பத்தின் பயனைப் பெறுவேனென்றால், தேவன் நிச்சயமாக ஊழியத்தின் மற்ற கதவுகளை எனக்காக மென்மேலும் திறப்பார்".

**கர்த்தருடைய பந்திக்கான முக்கியத்துவத்துக்கும்**
**கட்டிடத்திற்காகவும் ஒரு புதிய பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது**

மேரி: "நல்லது, அந்தக் கட்டடத்தினுடைய இப்படிப்பட்ட போஜனத்தைத் அவர்கள் தயாரிக்கும்போது, அந்த பாத்திரத்தை சுத்தம்செய்யமாட்டேன் என நினைக்கத் தேவையில்லை. மேலும் மற்ற யாராவது பந்தியை தயார் செய்யட்டும். எனக்கு அப்பம் எப்படி செய்யவேண்டுமென தெரியாது மேலும் எப்படியோ, நான் பார்க்கவில்லை ஏன் நாம் அதைச் செய்யவேண்டியிருக்கிறது".

ஆன்: இந்தமாதம் ஒருவர்கூட சபைக் கட்டிடத்தை சுத்தம் செய்யவில்லையென்றால், நாங்கள் செய்கிறோம். சிலசமயங்களில் கவனக்குறைவாக அதை அழுக்குப்படுத்துகிற மனிதர்கள் இருந்த போதிலும், இது தேவனை ஆராதிப்பதற்கென்று தனியாக அமைக்கப்பட்ட கட்டிடம், எனவே மிகவும் சிறப்பான வழியில், இது தேவனுடைய வீடு என நினைத்து சுத்தம் செய்யமுடியும் என்ற நினைவு எனக்குப் பிடிக்கும். மேலும் நான் பந்தியை ஆயத்தப்படுத்துவதிலும் விருப்பப்படுகிறேன். மனிதனுடைய கரங்களால் அவைகளை சுத்தம் செய்யாமலும் அவற்றை ஆயத்தப் படுத்தாமலும் இயேசுவின் மரணத்தின் நினைவுகூருதலானதை தொடரமுடியாது. ஆராதனையின் எனது சொந்த தனிப்பட்ட நேரத்தைக் கொண்டிருக்கிறேன் மேலும் நாம் பந்தி பாத்திரங்களின் மேல் நான் அக்கறைக் கொண்டிருக்கும்போது நான் என்னையே தேவனுக்குக் கொடுக்கிறேன் மேலும் சிறப்பாக அப்பம் செய்வதிலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறேன். இது மாவையும் எண்ணெயையும் எடுத்துவைக்க என்னை நல்லுணர்வுள்ளவளாக்குகிறது அத்துடன் புதிதாக மற்றும் அன்புடன் சபை தொழுகையில் உயர்ந்த நிலைக்கென அப்பம் தயார் செய்வதற்கு என் திறமையை சிறப்பானதாக மாற்றும் உணர்வையும் எனக்கு ஏற்படுத்துகிறது.

**ஒருவர் வீட்டு வேதாகம கற்றலுக்கு வேதாகம அஞ்சல் முறை பாடத்தினை எடுக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார்:**

ஜேம்ஸ்: "நல்லது, அங்கே நான் செல்ல எனக்கு நேரம் இருக்காது என்று அவர்கள் நினைக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். என்னுடைய எல்லா அதிகப்படியான நேரம் பயிற்சி செய்வதிலும் சபை பந்து விளையாட்டுக் குழுவிலும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மூப்பர்கள் பாடம் எடுப்பதில் ஒருவராக இருக்கவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இது தவிர, இந்த வாக்கர் என்பவரை எவ்வகையிலும் எனக்குத் தெரியாது அவர் உண்மையிலே எதிர்பார்க்கக் கூடிய ஆர்வமுள்ளவர் அல்ல மேலும் அதிகமான சிறு சிறு பிரயாணங்களில் நேரம் வீணடிக்கப்படும்..."

சாம்: இந்த மனிதனை சந்திக்கும்படி அவர்கள் எனக்கு இவரைக் கொடுத்ததினால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உண்மையாகவே கற்றுக்கொள்ள விரும்புகிற யாரோ ஒருவரை கண்டுகொள்வது எப்பேர்பட்ட ஆச்சரியம்! நான் இப்போதே என்னை அறிமுகப்படுத்திக் கொள்ள அவரை அழைத்து எப்போது முதல் வகுப்பை ஒழுங்கு செய்யலாம் என அவரைக் பார்த்து கேட்பேன். அத்தோடுகூட சத்தியத்தைக் கற்றுக் கொள்வதிலும், அவர்களோடே படித்துக் கொள்வதிலும் வாக்கருடைய சந்தர்ப்பம் ஜோனுக்கும் மேலும் எங்களுடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியில் எனக்கும் நன்றாக இருக்கும்....

வியாதியுடன் இருப்பதாக கூறின கிறிஸ்தவர்களைச் சந்திக்க தானாக முன்வருபவர்கள் அழைக்கப்பட்டனர்.

**டாம்:** வேண்டாம், என்னை அழைக்காதீர்கள் எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியாது. மேலும், நோய் என்னை சோர்வடையப்பண்ணுகிறது"

**ஸ்காட்:** நான் போகிறேன். ஒருவேளை என்னால் சில உதவி செய்யமுடியும். வியாதியஸ்தர்களைப் பார்ப்பதினால் என்னுடைய உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என்று நான் எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பது எத்தனை அவசியம் என என்னை அதிகமாக நினைவு படுத்துகிறது மேலும் படுக்கையில் படுத்துக் கொண்டு, வேதனையை அநுபவித்துக் கொண்டு, யாராவது வந்து போதுமான அளவு பராமரிப்பார்களென்றால் அது ஆச்சிரியமாயிருக்கும் என்பவர்களை பார்க்கவேண்டியது என்னுடைய வேலையாயிருக்கிறது"

**வாழ்வினாலும் சாவால்களினாலும் களைப்பு**

**பெத் கேள்விப்பட்டதை குறிப்பிடுகிறாள்:** "நான் ஒவ்வொன்றினாலும் மிகவும் சோர்ந்து போய் கொண்டிருக்கிறேன். கால அட்டவணையை வைத்துக் கொண்டிருக்க வேண்டியது, சவால்கள், செலுத்தவேண்டிய ரசீதுகள். நான் பிடித்துக் கொள்வது ஒருபோதும் முடியாதது, கூடுதல் நேரத்தை ஒருபோதும் பெற்றிருக்காதது அல்லது பணம்; ஒவ்வொன்றும் சரியான போராட்டம் போல் காண்கிறேன்".

**அனிதா புன்முறுவல்செய்தாள்:** சில நேரங்களில் நான் நினைக்கிறேன், நான் மிகவும் சோர்வாக இருப்பதைப் போலவும், இதைவிட்டு நான் உடனே வெளிவர முடியுமென நான் விரும்புகிறேன்", ஆனால் பின்பு என் குடும்பத்தில் மிக மோசமான நிலையில் வியாதியுள்ள சிலரை கவனிக்கவேண்டும், அல்லது எனது கணவர் வெளியூர் சென்றுள்ளார், அல்லது மகனை அல்லது மகளை பயங்கரமான நிலையில் என் குடும்பங்களில் இழந்திருக்கிறேன் அல்லது எங்கள் குடும்பங்கள் தேவனை விட்டு விலகிப் போயிருக்கிற குழந்தைகள் அல்லது இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்கின்றனர் அதன்பின் நான் இவ்வூழியத்தை எவ்வளவு சந்தோஷமாக செய்யவேண்டியவளாய் இருக்க வேண்டும் என நான் அறிகிறேன், எனக்கு எந்த ஒரு உண்மையான பிரச்சனை அல்லது வாழ்வதற்கான பெரிய கவலை ஒன்றையும் கொண்டவளா யிருக்கவில்லை ஆகவே கவலைப்படுவதின் மூலமும் சிறிய காரியங்களைக் குறித்து புகார் செய்து கொள்வதின் மூலமும் எனது சொந்த கஷ்டத்தின் சூழலை உருவாக்குகிறேன். அதன் பின் அது எவ்வளவு சிறிய விஷயம் என வெட்கப் பட்டேன். நான் பெற்றுள்ள எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களை உணர்ந்து பார்க்க உதவும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறேன், அதற்குமுன் நான் என்னுடைய மனோநிலையினிமித்தம் இவைகளை இழந்திருக்கக் கூடும்.

நீங்கள் முற்றிலும் எதிர்மறையான மனோபாவத்தையும் ஒரே சூழ்நிலை விளைவின் பயனைப் பிறப்பித்ததையும் இந்த வாழ்க்கை முறையில் விளக்கப்பட்டுள்ளதை பார்த்தீர்களா? இல்லை, இது உண்மையான சந்தர்ப்பம் அல்ல அல்லது பயங்கரமானது அல்லது நல்ல சமயங்கள் அல்லது அவைகளின் இழப்பு இவைகளெல்லாம் நம்முடைய வாழ்வை வடிவமைக்கிறது இது நமது வழியில் வருகிற ஒவ்வொரு நிகழ்வுக்குமான நேரடியான பதிலில் நம்முடைய சொந்த மனோபாவம் உள்ளது. நாம், நாமே இது ஆசீர்வாதமாக இருக்கும் அல்லது சாபமாக இருக்கும், நாம் வளர்ச்சியடைவோம் அல்லது இதனால் வறண்டு போய்விடுவோம் என தீர்மானிக்கிறோம்.

**மோசே சொன்னார்:** "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந் தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால்.... சாபமும் வரும்" (உபா.11:26,27) என்றான்.

கற்பனைகள் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியாக இருந்தது; ஆசீர்வாதம் ஒருவர் வாழ்விலும் சாபம் இன்னொருவர் வாழ்விலும் இருந்தது. இந்த வித்தியாசம் கற்பனைகளுக்கு அவர்களுடைய பிரதிக்கிரியையாக இருந்தது.

**பவுல் சொன்னான்:** "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்" (2கொரி.2:16).

கிறிஸ்தவனும் அவனுடைய செய்தியும் பலவருடங்களாக ஒரே விதமாக நிலைத்திருக்கிறது வேறுபட்ட செய்தியை கேள்விபடுகிறவர்களில் மட்டுமே இருக்கிறது நாம் ஒவ்வொருவரும், நாம் எப்படி கேள்விப்படுகிறோம், நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பனவற்றில் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய மனோநிலைகள் பரலோகத்திற்கு அனுப்பப்படும் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும். நாம் அவர்கள் மேலும் நம்முடைய பாதுகாப்பில் மிக ஜாக்கிரதையாக இருக்கமுடியாது.

# மூப்பர்களுக்கான தகுதிகள்



**வரைகுறிப்பு**

1. அந்நியரை உபசரிக்கிறவன்
2. போதக சமர்த்தன்
3. மதுபானம் பண்ணாதவன்
4. அடிக்கிறவனாய் இராதவன்
5. இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்
6. பொறுமையுள்ளவன்

**கலந்துரையாடல்**

**1. அந்நியரை உபசரிக்கிறவன்:**

மூப்பருக்கான தகுதிகள் என்ற தலைப்பில் அதிகமாக படிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு குறிப்பும் தெளிவாக உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். இந்த குணாதிசயங்கள் மெய்யாகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொண்டிருக்க வேண்டிய விசேஷமான குணங்களாக இருக்கின்றன. விவாகமானவர் என்பதற்கு தொடர்புடைய காரியத்தில் ஒருசிலர் மட்டுமே ஒவ்வொரு முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்குரிய குணாதிசயங்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெரும்பாலான தகுதிகளை உடையவராய் இருப்பதற்கு அவசியம் பிரயாசப்பட வேண்டும். இவைகளில் ஒன்றுதான் அந்நியரை உபசரிப்பது ஒரு மூப்பர் அந்நியரை உபசரிக்க விருப்பம் உள்ளவராயிருக்க வேண்டும் என்று தீத்து 1:8 உரைக்கிறது. தேவையோடு இருக்கிறவர்களை ஒருவர் தன்னுடைய வீட்டிற்குள் வரவேற்பதை இது குறிப்பிடுகிறது. ஒருவருடைய உணவையும், உறைவிடத்தையும் பகிர்ந்து கொள்வதினாலே ஒரு கிறிஸ்தவனுக்குரிய தயவை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது. சகல மனுஷரும் உபசரிக்கப்பட வேண்டும், ஆனால் விசேஷமாக உடன் இருக்கும் கிறிஸ்தவர்கள் உபசரிக்கப்பட வேண்டும் (கலா.6:10-11).

"பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" என்று ரோமர் 12:13 கூறுகிறது. எபிரெயர் 13:2 உரைக்கிறது "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" என்று ஆபிரகாம் அந்நியரை உபசரித்தபோது மெய்யாகவே அவர்கள் தேவதூதராயிருந்தார்கள் என்பதை இவ்வசனம் குறிப்பிட்டு காட்டுகிறது (ஆதி.18:1-8) 1யோவான் 3:17 "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" என்று போதிக்கிறது. 1 பேதுரு 4:9, "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" என்று ஒரு மூப்பரானவர் உபசரிக்கும் தன்மை உடையவராக இருப்பது மிக அவசியம் என சொல்கிறது.

**2. போதக சமர்த்தன்;**

"சமர்த்தனாய் இருப்பது என்ற வார்த்தை" தகுதியும் விருப்பமும் உடையவராயிருப்பதை குறிப்பிடுகிறது. ஒரு மூப்பர் ஒரு சிறந்த தகுதியுடைய வேதாகம போதகராக இருக்க வேண்டியது அவசியம். கவனமாக கற்றுக் கொள்வது, ஜாக்கிரதையுடனே ஆயத்தமாக இருத்தல் மற்றும் போதிப்பதில் அதிகமான அனுபவம் ஆகியவற்றிலிருந்து இது வருகிறது. ஒரு ஊழியக்காரன் போதக சமர்த்தனாயும் இருக்க வேண்டியது அவசியம் (2தீமோ.2:24). கிறிஸ்தவம் போதிக்கப்பட்ட ஒரு மார்க்கமாக இருக்கிறது. இயேசுவானவர் சகல ஜாதிகளுக்கும் போதித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து பின்பு அவர்களுக்கு மீண்டும் போதியுங்கள் என்றார் (மத்.28:19,20). இயேசுவானவர்: தேவன் ஜனங்களை கிறிஸ்துவினிடமாய் கேட்பது மற்றும் கற்றுக்கொள்வதன் மூலமாய் இழுத்துக் கொள்கிறார் என்றார் (யோவான் 6:44,45) பவுல் தீமோத்தேயுவுக்கு, அவர் கற்றுக் கொண்ட காரியங்களை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும் என்று சொன்னான் (2தீமோ.2:1).

ஆதி சபையார் இடைவிடாமல் இயேசுகிறிஸ்துவை குறித்து போதித்தும் பிரசங்கித்தும் வந்தார்கள் (அப்.5:42) எபிரெய கிறிஸ்தவர்கள் போதகர்களாய் இருந்திருக்க வேண்டும், அவர்களுக்கு யாரோ ஒருவர் தேவனுடைய வார்த்தையின் மூல உபதேசங்களை போதிக்க வேண்டியதாயிருந்தது (எபி.5:12) இந்த வேதவாக்கியங்கள் சபையிலே இருக்க வேண்டிய சிறந்த உபதேசம் மற்றும் சிறந்த போதகர்களின் பெரிதான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு மூப்பர் தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு முன்பாக சிறப்பாகவும், திறமையாகவும் போதிக்கிறவராக அவசியம் இருக்க வேண்டும். அவர் மந்தையை போஷிக்கிறவராக இருக்க வேண்டும் (அப்.20:28). அவர் பலமான போதகத்தினாலே சபையிலே பிழை, மற்றும் பாவத்தை மேற்கொள்ள வேண்டியது தேவையானதாக இருக்கிறது. அவர் போதக சமர்த்தனாக இருக்க வேண்டியது அவசியம்.

**3. மதுபானம் பண்ணாதவன்:**

இது குறிப்பிடுகிறது என்னவென்றால் நிச்சயமாக மதுபானத்தினால் வெறிகொள்ளும் பழக்கம் அற்றவராக இருக்க வேண்டும் அல்லது மதுபான மயக்கத்திற்கு வழி நடத்தும் எந்தவொரு பழக்கமும் அற்றவராக இருக்க வேண்டும். பவுல் தான் எந்த ஒன்றுக்கும் அடிமைப்படுத்தப்பட மாட்டேன் என்று சொன்னான் (1கொரி.6:12) வெறியர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்றும் அவன் சொன்னான் (1கொரி.6:10). மதுபானப்பிரியர்கள் தரித்திரம், பரிதாபம், துக்கம், சண்டைகள், புலம்பல், காரணமில்லாத காயங்கள், இரத்தங்கலங்கின கண்கள் இவைகளை உடையவர்களாயிருக்கிறார்கள் (நீதி.23:21, 29-35) மதுபானம் பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். திராட்சரசமானது சரியான முறையில் கர்த்தருடைய பந்தியிலே பயன்படுத்தப்படலாம். (மத்.26:29). அது மருந்துக்காகவும் பயன்படுத்தப்படலாம் (1தீமோ.5:23) ஆனால் ஒருவன் வெறிகொள்ளும்படி தன்னை வழிநடத்துகிற திராட்சரசத்தை பானம் பண்ணுவது என்பது பாவம் நிறைந்த காரியமாக இருக்கிறது. மூப்பர்கள் தங்களை மதுபானத்திற்கு ஒப்புக்கொடாமல் இருந்து ஒரு சிறந்த முன் மாதிரியை வெளிப்படுத்த வேண்டும்.

**4. அடிக்கிறவனாய் இராதவன்:**

ஒரு மூப்பரானவர் மற்றவர்களை அடிக்கிற ஒருவராக இருக்கக்கூடாது. அவர் அடித்தல் இல்லாமல் மற்றவர்களிடத்தில் செல்வாக்கு ஏற்படுத்திக் கொள்கிறவராக இருக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவர் எப்பொழுதுமே எவர் ஒருவரையும் அடிக்கிறவராக இருக்கக்கூடாது. இயேசுவானவர் ஒரு சவுக்கினால் ஆடு, மாடுகளை தேவாலயத்துக்கு புறம்பே துரத்தினார் (யோவான் 2:15). பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் சிட்சைக்காக பிரம்பைக் கையாட வேண்டும். (நீதி.13:24). ஆனால் மூப்பர்களோ ஒரு பிரம்பு அல்லது சவுக்குக்கு பதிலாக பயன்படுத்துகிறார்கள். பூமிக்குரிய தண்டனை அரசாங்கங்களினால் பயன்படுத்தப்படுகிறது (ரோமர் 13:3,4) ஆனால் கிறிஸ்துவின் ராஜ்யம் பட்டயத்தைக் கொண்டு ஆளுகை செய்யப்படுகிறதில்லை. (மத்.26:51,52) தேவனுடைய வார்த்தை யானது பூமிக்குரிய எந்த பட்டயத்தை பார்க்கிலும் மிகுந்த வல்லமை நிறைந்ததாக இருக்கிறது (எபி.4:12). நம்மை அடிக்கிற சத்துரு ஒருவரை மேற்கொள்வதற்கு கொடுமை செய்வதைப் பார்க்கிலும் நாம் மற்றொரு கன்னத்தை காட்டுவது மிகச்சிறந்த காரியமாக இருக்கிறது (மத்.5:39) அடிக்கிறவர்களாய் இருப்பதற்கு தாங்கள் மறுப்பு தெரிவிக்கிறதினாலே மூப்பர்கள் மற்ற கிறிஸ்தவர்களுகது முன்மாதிரிகளாக இருக்கிறார்கள்.

**5. இழிவான ஆதாயத்தை இச்சியாதவன்:**

ஒரு மூப்பர் பேராசை கொண்டவராக இருக்கிறதில்லை இழிவான ஆதாயம் என்பது பணம் அல்லது உலகத்துக்குரிய ஆதாயமாக இருக்கிறது. ஒரு பொருளாசையுள்ள மனுஷன் தான் கொண்டிருக்கிற திரளான ஆஸ்தியில் தான் தன் ஜீவன் அடங்கியிருக்கிறது என்று எண்ணுகிறான் (லூக்.12:15). தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறவன் தேவனிடத்தில் ஐசுரியவானாயிருக்கிறதில்லை (லூக்.12:21). இயேசுவானவர், நாம் தேவனுக்கும், பணத்துக்கும் ஊழியஞ்செய்ய முடியாது என்று (மத்.6:24). பொருளாசையுள்ள மனுஷர் விக்கிரகாராதனைக்காரராக இருக்கிறார்கள் (கொலோ.3:5). அவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க மாட்டார்கள் (1கொரி.6:9,10) அவர்கள் சபையிலிருந்து விலக்கப்பட வேண்டும். (1கொரி.5:11).

கிறிஸ்தவர்கள் ஐசுவரியவான்களாக இருக்கும்படி நாடுகிறதிலலை. அவர்களுடைய தேவபக்தியே மிகுந்த ஆதாயமாக இருக்கிறது. உண்ணவும், உடுக்கவும் இருப்பது அவர்களுக்கு போதுமானதாயிருக்கிறது. அவர்கள் சோதனையில் இருந்தும், மனுஷரை அழிவில் அமிழ்த்துகிற ஐசுவரியமாகிய கண்ணியில் இருந்தும் தங்களை காத்துக் கொள்கிறார்கள். பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் (1தீமோ.6:6-10) ஒரு கிறிஸ்தவனுடைய பலன் பரலோகத்திலே இருக்கிறது (மத்.5:12) பணஆசை கொண்டு வருகிற சுயநலத்தையும், பேராசையையும் அவன் தவிர்த்து விடுகிறான்; மூப்பராயிருக்கிறவர்கள் பண ஆசைக்கும் உலகத்தின் காரியங்களுக்கும் நீங்கலான மனுஷராயிருக்கும்படி ஒருபலம் வாய்ந்த முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சியாதவர்களாக இருக்கிறார்கள்.

**6. பொறுமையுள்ளவன்:**

ஒரு மூப்பர் சாந்தமும், பொறுமையும் உள்ளவராக இருக்கிறார். அவர் பகுத்து பார்க்கிறவராகவும், தயவுள்ளவராகவும் இருக்கிறார். அவர் கோபப்படாமல் பாரங்களை அவர் பூமியிலே விலையேறப்பெற்ற உடைமைகளுக்காக பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவராக இருக்கிறார் (மத்.16:26).அவருடைய பொறுப்பு பெரிதானதாக இருக்கிறது. ஆகையால் ஒரு மூப்பராக இருக்க வேண்டுமாகில் கனம் பொருந்திய பொறுப்புகளின் கீழாக எவ்வாறு உண்மையுள்ளவராக இருப்பது என்பதை அந்த மனுஷன் அவசியம் அறிந்திருக்க வேண்டும். அவர் மற்றவர்களுக்குரிய விலையேறப் பெற்ற உடைமைகளை குறித்து நம்பிக்கைக்கு பாத்திரமானவராக இருக்க வேண்டும். அவர் தன்னுடைய கணக்கொப்புவிக்கும் நிலையை அவசியம் பலமாக உணர்ந்திருக்க வேண்டும். ஒரு மூப்பராக இருக்கிறவர் அநுபவம் வாய்ந்த தேவனுடைய ஒரு உண்மையுள்ள உக்கிராணக்காரனாக இருப்பது மிகவும் அவசியம்.

**கேள்விகள்**

1. சண்டை பண்ணாத ஒருவன் என்றால் என்ன?
2. சச்சரவை உண்டுபண்ணக்கூடிய ஒரு மனுஷன் எதை விரும்புகிறான்? ________________________
3. மற்ற எவர் ஒருவரைப் பார்க்கிலும், ஒரு மனுஷனுடைய குணாதிசயங்களை யார் நன்கு அறிந்தவர்களாயிருக்கிறார்கள்?
4. ________________________ தன் ________________________அனைவரைரோடும் தேவனுக்கு பயந்தவனாயிருந்தான்.
5. விசுவாசமுள்ள பிள்ளைக் குறித்த 3 வேத வாக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
6. ஒரு நூதன சீஷன் என்பவன் ________________________
7. எந்த பாவம் ஒரு நூதன சீஷனுக்கு அபாயத்தை உண்டாக்குகிறது? ____________________________
8. "புறம்பானவர்கள்" என்பது யார்?
9. ஒரு உக்கிராணக்காரன் என்றால் என்ன?
10. விலையேறப்பெற்ற உடைமை என்பது என்ன?

சிறுவர் பகுதி

# இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1இராஜாக்கள் 11:9

**அ**ன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.



ஆனால், சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால், கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே, இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். கர்த்தர் இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின் பற்றி சோரம்போனான். நீங்களும் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களை பாது காத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்” (யாத்திராகமம் 20:3)


‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள்

இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,

ஒரு வருடத்தில் பயின்று Certificate

பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



Batlagundu Bible College, P.O. Box No. 5, Batlagundu-624 202, South India.

## வேத அறிவுப் போட்டி எண்: 279

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. வெயில் எவனுடைய தலையில் படுகிறதினால் சாவை விரும்பினான்?
2. எவனுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாக சாட்சி சொன்னார்கள்?
3. பெத்லகேமிற்கு மற்றொரு பெயர் என்ன?
4. யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்கள் எந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்?
5. அவர்கள் முழுவதும் காய்ந்துபோன செத்தையைப்போல எரிந்துபோவார்கள் இது எதைக்குறித்த பாரம்?
6. நீங்கள் பூமிக்கு என்னவாயிருக்கிறீர்கள்?
7. சித்திரக்காரனுக்கு அவன் செய்த சுரூபம் உதவுமா?
8. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படும்போது கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்கவேண்டியதே ஆனால் எது உடனே வராது?
9. இஸ்ரவேலில் மீதியானவர்கள் என்ன செய்வதில்லை?
10. எவன் சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்?

## வேதாகம ஆய்வு... 63 சிமியோன் – Simeon



1. சிமியோன் என்றால் கேட்குதல் என்று அர்த்தம்
2. லேயாளுக்கு பிறந்த இரண்டாம் மகன் – ஆதி.29:32
3. சிமியோனும் லேவியும் ஏகசகோதரர் – ஆதி.49:5
4. சிமியோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள் – எண்.1:23
5. முத்திரை போடப்பட்ட கோத்திரங்களில் சிமியோன் கோத்திரம் – வெளி.7:7

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

November 2023



வேர்ல்டு இவான்சலிசம் வேதாகமபள்ளி நிர்வாகி, ஆசிரியர் மற்றும் மாணவர்கள்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



எருசலேமில் பேதுரு பிரசங்கித்த முதல் சபை இருந்த இடம்

To

**Postman Remarks (If Undelivered):**

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan